# ‘அறுபடை வீடே’ ஆதங்கம் கொள்கிறது!

மதுரையில் இந்து முன்னணி நடத்திய மாநாடு போலி முகாந்திரம் கொண்டது என்பதை தமிழ்நாட்டு மக்கள் முழுமையாக உணர்ந்து விட்டனர்.

மாநாட்டில் நடைபெற்ற பக்தி மார்க்க மூலதனத்தை பா.ஜ.க. மற்றும் அதன் தோழமைக் கட்சிகள் அரசியல் ஆதாயம் பெற்றிட நடத்தப்பட்ட நாடகமாக அனைவராலும் உணரமுடிகிறது. மொத்தத்தில் அவர்களின் குள்ளநரி தந்திர முயற்சி மாநாடு தோல்வியடைந்தது.

தமிழ்நாட்டின் அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற குள்ளநரியின் குணத்தையே காலமெல்லாம் தமதாக்கிக் கொண்டு மதவெறியை மக்கள் மனதில் திணித்து ஆதாயம் தேடும் சுயநல மதவாத ஆர்.எஸ்.எஸ்.ஸின் முயற்சிக்கு தமிழ்நாடு ஒரு நாளும் இரையாகாது.

தமிழ்க் கடவுள் முருகனை தங்களுக்கு சாதகமாக மதவெறி பிடித்த கும்பல் பயன்படுத்திக் கொள்ள துடிக்கிறது.

தேசப்பற்று தனக்கு மட்டுந்தான் சொந்தம் என்று இந்திய மக்களை நம்ப வைத்து விட வேண்டுமென்று பா.ஜ.க துடியாய் துடித்தாலும் அதை மக்கள் ஏற்க தயாராக இல்லை.

தமிழ்நாட்டின் மீது பா.ஜ.க. அரசியல் போரை மக்கள் மீது அழுத்தமாக முன் வைத்திருக்கிறது.

**“ஜனநாயக ரீதியாக எதிர் கொண்டு**
**திராவிட மாடல் அரசு வெல்லும்”**

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியை இந்தியாவிலேயே சிறப்பாக நடத்தி வரும் மாண்புமிகு **முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்களின் திராவிட மாடல் கொள்கை இந்தியா முழுக்க பெரும் ஆதரவு பெற்று வருகிறது.

இதைக் கண்டு பயம் கொண்டுள்ள ஆர்.எஸ்.எஸ். மூளையை பா.ஜ.க. வாயிலாக தி.மு.க. வை எப்படியாவது தோற்கடித்து விட வேண்டும் என்கின்ற சங்கிகளின் பல ஆண்டுகால இன விரோத கனவை நிறைவேற்றிக் கொள்ள பகீரத முயற்சியைக் கையாளுகிறது.

இன விரோதத்திற்கு துணைபோகும், ஆரியர்களைத் துதிக்கும் தமிழ்நாட்டு சங்கிகளின் ஆதரவாளர்கள் நம் மொழியை மறந்து நம் இனத்தை மறந்து, நம் உரிமையை இழந்து, அடிமைகளாய் வாழ்ந்து, எதிர்கால சந்ததிகள்... நமது மொழி, கலாச்சாரம், தன்மானம், சுயமரி யாதை அனைத்தையும் இழந்து விட்ட பிறகு இவர்கள் சிந்திப்பார்களே யானால், கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் என்பது தானே மிச்சம்.

**நாகை.சந்திரபாபு**
பொருளாளர், தலைமை கழக இலக்கிய அணி, தி.மு.க.



தமிழ்மொழி உணர்வாளர்கள் தமிழ் இனத்தைப் பற்றி அக்கறையுடன் சிந்திப்பார்களேயானால் உலக அளவில் வாழும் மக்களில் தமிழ் இனம் எத்தனை விழுக்காடு ? என்பதை சிந்திக்க வேண்டும்.

உலக மக்கள் தொகையில் நாம் மிக, மிக சிறுபான்மையினரே! ஆய்வு செய்தால் நாம் ஓர் இலக்க விழுக்காடுதான் என்பதை அறிய வரும்.

உலகம் முழுக்க தமிழர்கள் வாழ்ந்தாலும், தமிழர்களின் தலைமையகம் தமிழ்நாடு தான் என்பதையும் நாம் பொறுப்போடு உணர வேண்டும்.

சமூகநீதியை நிலை நாட்ட சபதமேற்றிருக்கும் அனைத்து இயக்கங்களும் மதவெறியை வேரோடும், வேரடி மண்ணோடும் ஒழிக்க ஒன்று கூடி பா.ஜ.க.வை தோற்கடிக்கும்.

நம் தமிழினத்தையும், தமிழ் கலாச்சாரத்தையும், தமிழ் பண்பாட்டையும், தன் மானத்தையும், சுயமரியாதையையும் நிலை நிறுத்தி, தமிழ்நாட்டை வளப்படுத்த, தமிழ் மொழியை வலுப்படுத்த வேண்டியவர்களாக இருக்க வேண்டியவர்கள், தங்களது சுயநலத்தை வளப்படுத்த, போலி அடையாளத்தை உருவாக்கி கொண்டு சமூகநீதியை நிலை நாட்டத் தவறிய, பொறுப்பற்ற தலைவர்கள் தமிழ்நாட்டை சீரழித்துக் கொண்டிருப்பதை பொது வாழ்க்கையில் தங்களை ஈடுபடுத்தி கொண்டுள்ள யாரும் ஏற்க மாட்டார்கள்.

மதுரை பக்தர்கள் மாநாட்டில் 6 தீர்மானங் களை நிறைவேற்றியிருக்கின்றனர்.

2 தீர்மானங்கள் : பக்திக்கு சம்பந்தம் இல்லாதவை?...

(1) பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுத்த மோடிக்கு பாராட்டு.

(2) ஒவ்வொரு தேர்தலிலும் இந்துக்கள் ஒற்றுமையாக இருந்து இந்துக்களின் ஓட்டு வங்கியை நிரூபிக்க வேண்டும்.

இவையிரண்டும் பா.ஜ.கட்சி மாநாட்டில் வைக்க வேண்டிய தீர்மானங்கள். பக்தி மாநாட்டிற்கும், ஆன்மீகத்திற்கும் தொடர்பற்றது. அறுபடை வீடே ஆதங்கம் கொள்கிறது.

இது நமது கேள்வியல்ல. அங்கே கூடியிருந்த முருகப் பக்தர்களின் வேதனை முணுமுணுப்பு. 2014ல் ஏழை மக்கள் ஒவ்வொருவருடைய வங்கி கணக்கிலும் ரூ.15 இலட்சம் பா.ஜ.க அரசால் வரவு வைக்கப்படும் என்று உறுதியளித்து மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தவர்கள்...!

2019ல் தேர்தலுக்கு இரு வாரங்களுக்கு முன்பு தேசவிரோத செயலாக புல்வாமா தாக்குதலை செயற்கையாக ஏற்படுத்தி, இந்திய மக்கள் அனைவருக்கும் தேசப்பற்றை உருவாக்கி, வாக்கு வங்கியை தேர்தலுக்காக தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு ஆட்சியைப் பிடித்தவர்கள்.

2024ல் மக்கள் செல்வாக்கு இழந்ததை அறிந்து இராமர் கோயில் கட்டியதன் மூலம் ஆன்மீக அரசியல் ஆதாயம் தேட மூன்றாவது முறையாக ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்று குள்ள நரித்தனத்தை கையாண்டதின் மூலம் தேர்தலில் தில்லு முல்லு செய்தும் கூட, தனி மெஜாரிட்டியோடு பா.ஜ.க. வால் ஆட்சியமைக்க முடியவில்லை. போலித்தனமாக மோடி அவர்கள் ராஜினாமா செய்து விடுவதாகவும், அறிவிப்பு செய்தார்.

சந்திரபாபு நாயுடுவையும், நிதீஷ்குமார் அவர்களையும் கை, கால்களை பிடித்து தொடர்ந்து பிரதமர் பதவியை தக்க வைத்துக் கொண்ட பா.ஜ.க. இராமர் கோயில் யுக்தியால் தோற்றுப் போனது என்பதை நாடறியும்.

மோடியை ‘குழந்தை இராமர்’ காப்பாற்றினாரா? அல்லது சந்திரபாபு நாயுடு காப்பாற்றினாரா? தமிழ்நாட்டில் முருகனைப் பிடித்து அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பது, மோடிக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தும். நமது தமிழ் மண்ணில் தொடர் தோல்வியடையும் பா.ஜ.க.

**‘பராசக்தி’** படத்தில், கலைஞரின் வசனத்தில் **“கோயில்கள் கூடாது என்பதல்ல. அது கொடியவர்களின் கூடாரமாக மாறி விடக் கூடாது”** என்று அவர் எழுதியிருப்பார். இதற்கு கிடைத்த மாபெரும் வரவேற்புதான், எக்காலமும் **“திராவிட மாடல் ஆட்சி”** தான் தமிழ்நாட்டை வழி நடத்தும். பா.ஜ.க. முருகன் பக்தி மாநாட்டு தீர்மானத்தில் தமிழகத்திலுள்ள கோயில்களிலிருந்து **‘இந்து சமய அறநிலையத் துறையையே’** வெளியேற்ற வேண்டும் என்கின்றனர்.

இப்போது புரிகிறதல்லவா? இது பக்தி மாநாடா? ஆர்.எஸ்.எஸ். மாநாடா?

“அறநிலையத்துறையையே அகற்ற வேண்டுமாம்...! ஆலயங்களை ஆரியர்கள் ஆள வேண்டுமாம். இதை ஒரு முருகப் பக்தனாவது வரவேற்பானா? தமிழ்நாட்டில் உங்கள் ஜம்பம் எக்காலமும் பலிக்காது.

இந்து முன்னணி பொருளாளர் எனும் நபர், “முதல் சங்கி முருகக் கடவுள்” தான் என்கிறார். திருவள்ளுவருக்கு சாயம் பூச முயற்சித்தது போல், முருகனுக்கு ஆரியன் எனும் சாயம் பூச முயற்சிக்கும் இந்த கும்பல், தோல்வியைத் தழுவும்.

மூட நம்பிக்கையைத் திணிப்பவன் சங்கி.. மூட நம்பிக்கையில் மூழ்குபவனும் சங்கி தான்.

காவல்துறை அதிகாரியாக பணியாற்றி, ஒரு கட்சிக்கும் தலைவராகி தலைவர் பதவி இழந்த பின்பும், தன்னை தலைவராகவே கருதிக் கொண்டு, பித்தம் பிடித்தவர் போல பக்தி மாநாட்டில் கக்கியிருக்கும் சொற்கள்...

தான் பேசியதை ஆடுமலை (அண்ணாமலை) செய்தித் தாளில் படித்தால், அவரே வைத்தியம் பெற வேண்டியவராவார்.

குமரியார் மகள் தமிழிசை... கூறும்போது “இந்துக்களுக்கு வாழ்த்து சொல்லாதவர்கள் மக்களின் வாழ்த்துகளை பெற முடியாது” என கூறுகிறார். ‘சகோதரி’ என நாம் ஏற்று அவருக்கு சொல்லும் பதில். நாங்கள் வணக்கங்கள் சொல்லி, மக்களின் வாழ்த்துகளைப் பெறுபவர்கள். 2026லும் இதை உணர்வார் தமிழிசை!.

பக்தி மாநாட்டிற்கு முட்டுக் கொடுத்துள்ளார் பழநிச்சாமி.

அந்த மாநாட்டிற்கு வாழ்த்தும் தெரிவித்திருக்கிறார். அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் நான்கைந்து பேர்களை அனுப்பி பங்கேற்க வைத்துள்ளார். அதிலொரு அமைச்சர் “பா.ஜ.க. மாநாட்டு தீர்மானங்களை அ.தி.மு.க. ஏற்காது”என்றார்.

அறிஞர் அண்ணாவின் பெயரால் உருவாக்கப்பட்ட கட்சிக்கு பொதுச் செயலாளராக இருக்கக்கூடிய எடப்பாடி “என்ன தன்னிலை விளக்கம் தர போகிறார்?” அ.தி.மு.க. மதவாத கட்சி என்பது போல, வழி நடத்துகிறார் என்ற சந்தேகத்தை அ.தி.மு.க. மக்களுக்கு தெளிவாக்க வேண்டும்.

அறிஞர் அண்ணாவின் “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற கொள்கையை நான் இதுவரை கேள்விப்பட்டதில்லை என எடப்பாடி கூறுவாரா ?

தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டினை தொலைக்காட்சியில் பார்த்து தெரிந்து கொண்டது போல இனிமேல் தான் “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற அறிஞர் அண்ணாவின் கொள்கையை படித்து அறிய வேண்டுமென்பாரோ?



கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் முன்னிலையில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுத் தலைவர், கள்ளக்குறிச்சி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் தலைமையில் நேற்று முன்தினம் (26.06.2025) வியாழக்கிழமை அன்று நடைபெற்றது, உடன் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுத் துணைத் தலைவர், விழுப்புரம் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் முனைவர் து.ரவிக்குமார், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

---

### மதுரை தெற்கு மாவட்டத்தில் - சட்டமன்றத் தொகுதி வாரியாக

# பாக முகவர் - தகவல் தொழில் நுட்ப அணி பாகப் பொறுப்பாளர் பயிற்சிக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, ஜூன் 28-

மதுரை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை மதுரை தெற்கு மாவட்டம் சட்டமன்ற தொகுதி வாரியாக பாக முகவர்கள் (BLA2) மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி பாக முகவர்கள் (IT WING Booth Digital Agent) பயிற்சிகூட்டம் 28.06.2025 - 29.06.2025ம் தேதிகளில் நடைபெறும் விவரம்.

தொகுதி: திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி, 28.06.2025 காலை 10.00 மணி அளவில், திருமங்கலம், குதிரைசாரிகுளம், நான்கு வழி சாலையில் உள்ள கொடி அரங்கம் திருமண மகால், தொகுதி: உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதி,

29.06.2025 மாலை 4.00 மணி அளவில், கருமாத்தூர், மதுரை தேனி மெயின் ரோட்டில் உள்ள வி.கே.எஸ். ஹைடெக் திருமண மகாலிலும்,

தொகுதி: திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதி,

29.06.2025 மாலை 06.00 மணி அளவில், திருப்பரங்குன்றம், பசுமலை, டி.பி.கே ரோடு ரோட்டில் உள்ள கோபால்சாமி திருமண மகாலிலும்,

குறிப்பு: இப்பயிற்சிக்கு திருமங்கலம் உசிலம்பட்டி திருப்பரங்குன்றம் ஆகிய சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த பாக முகவர்கள் (BLA2) மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி பாக முகவர்கள் (IT WING Booth Digital Agent) அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும். அதை ஒன்றிய, நகர, பகுதி பேரூர் கழக செயலாளர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.



ஓரணியில் உறுப்பினர் சேர்க்கை தலைமை கழகத்தால் கூர்ந்து கண்காணிக்கப்படுகிறது. மேற்கண்ட பயிற்சியில் தலைமைக் கழகத்தால் பயற்சி பெற்ற தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் செயலியில் (APP) கையாலுவது சம்பந்தமாக பயிற்சி அளிக்கிறார்கள். இப்பயிற்சியில் பங்கு பெற்றால்தான் “ஓரணியில்தமிழ்நாடு” செயலியில் உறுப்பினர் சேர்க்கையை கற்றுக் கொள்ள முடியும். மேலும் இப்பணியினை சிறப்பாக வெற்றி அடைய முடியும்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக, தகவல் தொழில்நுட்ப அணி மூலம்

# கழக புதிய உறுப்பினர் சேர்ப்பு! BLA2, BDA இணைய தள செயலி பயிற்சி முகாம்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் அறிக்கை!

*புதுக்கோட்டை, ஜூன் 28-*

*கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 01.06.2025 அன்று மதுரையில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட சிறப்பு தீர்மானமான மண் மொழி மானம் காத்திட “ஓரணியில்_தமிழ்நாடு” என்ற கழக புதிய உறுப்பினர் சேர்க்கை திட்டத்தை இணையதள செயலியை செயல்படுத்த சட்டமன்றத் தொகுதி வாரியாக புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி மூலம் வாக்குச்சாவடி முகவர் (BLA*



*2), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள் (BDA) பயிற்சி முகாம் கீழ்க்காணும் இடங்களில் நடைபெறும்.*

*28.06.2025, சனிக்கிழமை காலை 10 மணி புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி திருவப்பூர் கனகம்மன் திருமண மண்டபம், புதுக்கோட்டை*

*29.06.2025, ஞாயிறு மாலை 4 மணி விராலிமலை சட்டமன்றத் தொகுதி சமுதாயக் கூட மண்டபம், இலுப்பூர்*

*30.06.2025, திங்கள் மாலை 4 மணி கந்தர்வக் கோட்டை சட்டமன்றத் தொகுதி ஓ எஸ் பி திருமண மகால், கீரனூர்.*

*அதுசமயம், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள் (BDA), பாக இளைஞரணி நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் கழக இளைஞரணி நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் அனைவரும் அந்தந்த சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இடங்களில் தவறாமல் கலந்து கொண்டு ‘மக்களுடன் ஸ்டாலின்’ இணைய செயலி (APP) பயன்படுத்தும் முறையை அறிந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது என மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் தெரிவித்துள்ளார்.*

---

### காரைக்கால் வடக்கு

# தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்!

## ஏ.எம்.எச்.நாஜிம் - நாக.தியாகராஜன் சிறப்புரை!

*காரைக்கால், ஜூன் 28-*

*காரைக்கால் மாநில தி.மு.க. கழகம் சார்பில் வடக்கு தொகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் நாளை (29.6.25 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி அளவில் பாரதியார் வீதியில் உள்ள MMH மஹாலில் நடைபெற உள்ளது.*

*இந்நிகழ்ச்சியில் வடக்கு தொகுதி தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும் மாநில விவசாய அணி அமைப்பாளருமான பிரபு (எ) பிரித்திவிராஜ் தலைமையில் நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியில் மாநில கழக அமைப்பாளரும் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச்.நாஜிம் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் நிரவிதிருப்பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான நாக. தியாகராஜன் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். தலைமைக் கழக நிர்வாகிகளும் தொகுதி கழக நிர்வாகிகளும் கிளைக் கழக நிர்வாகிகளும் கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டு கழகத்தின் வளர்ச்சிக்கு எழுச்சிக்கும் கருத்துக்களை வழங்கிடுமாறு காரைக்கால் வடக்கு தொகுதி திமுக கழகம் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

---

### விழுப்புரம் வடக்கு - மேல்மலையனூர் முன்னாள் ஒன்றியச் செயலாளர் -

# இல.பவுணனின் 27 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்கினார்!

*செஞ்சி, ஜூன் 28-*

*மேல்மலையனூர் முன்னாள் ஒன்றிய தி.மு.க. செயலாளர் இல. பவுணனின் 27 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் 1500 நபர்களுக்கு நல உதவிகளை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்.*

*விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில்முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா மற்றும் மேல்மலையனூர் முன்னாள் ஒன்றிய திமுக கழக செயலாளர் இல பவுணன் அவர்களின் 27 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மேல்மலையனூர் ஒன்றியத்தில் உள்ளஅரசு பள்ளியில் 10 ,12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள், கேடயங்கள், வழங்கும் நிகழ்ச்சிமற்றும் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி வளத்தி ஊராட்சியில் நடைபெற்றது.*

*நிகழ்ச்சிக்குமேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். பூங்காவனம் பவுனன், இளங்கோ லட்சுமி, இராவணன் தமிழரசி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன் அனைவரையும் வரவேற்றார்.*

*நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் ஒன்றிய திமுக செயலாளர் இல. பவுணன் அவர்களின் திரு உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார் .*

*தொடர்ந்து மறைந்த இல. பவுணன் நினைவு அறக்கட்டளை சார்பில் மேல்மலையனூர் ஒன்றியத்தில் உள்ள அரசு பள்ளியில் 10, 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் பள்ளி அளவில் முதல் மூன்று இடங்களில் பிடித்த 100 மாணவ மாணவிகளை பாராட்டி சான்றிதழ்களையும், கேடயங்களையும்,1500 நபர்களுக்கு ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளைமாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வழங்கினார்.*

*நிகழ்ச்சியில்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன், ஒன்றிய நிர்வாகிகள்மன்ன ஏழுமலை, உதயகுமார், ஆறுமுகம், ஜெய்சங்கர் செந்தில்குமரன், சரவணன், பெருமாள், ஆறுமுகம், தமிழரசி பாண்டியன் ,அர்ஷத் பேக்,ஜிபிஎஸ் முருகன், ரேணு, பாலமுருகன், ரகுராமன், சிவ சக்தி, ஷாகிரா அப்துல் வஹாப், ரவிச்சந்திரன், ராஜா, குபேந்திரன், கோபாலகிருஷ்ணன், அரிதாஸ், வெங்கடேசன், காந்திமதி ஏழுமலை, ஆர்.எஸ் .செல்வம், எஸ்.பி. சம்பத், டி.பி..ஏழுமலை. பச்சையப்பன், குமார், பழனி, மோகன்தாஸ், முருகேசன், மணிவண்ணன், நிர்மல் ராஜ், மணிகண்டன், ரங்கநாதன், ஆறுமுகம், கெங்கபுரம் ராஜா, பள்ளி ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் பொது மக்கள் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர் வளத்தி ஊராட்சி மன்றத் தலைவர் விஜய லட்சுமி ஜெய்சங்கர் நன்றி கூறினார்.*



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் மேல்மலையனூர் முன்னாள் ஒன்றிய தி.மு.க. கழகச் செயலாளர் இல.பவுணன் அவர்களின் 27வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மலர் தூவி மரியாதை செலுத்தி 1500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர்கள் மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன், செஞ்சி விஜயகுமார், வல்லம் அமுதா ரவிக்குமார், ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி சாந்தி சுப்பிரமணியன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.